அனுப்புதல்

மரு. வி. ஜெயச்சந்திர பானுரெட்டி, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
கிருஷ்ணகிரி.

பெறுதல்

வன உயிரினக்காப்பாளர்,
மத்திகிரி கால்நடைப்பண்ணை,
ஒசூர்.

ந.க.19952/2021/எச்3 நாள்: **26**.08.2021

அய்யா,

பொருள்: நில வகை மாற்றம் - கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டம், அயர்னப்பள்ளி கிராம, புல எண்.954, 955, 956, 959 முதல் 965 மற்றும் 970 முதல் 972 மற்றும் 977, 978 ஆகிய புலங்களின் மொத்த விஸ்தீரணம் 32.49.0 ஹெக்டேர் அரசு தீ.ஏ.த வனச்சரகம் நிலத்தில் 1.52.00 ஹெக்டேர் நிலத்தினை அணுகு பாதை வசதிக்காக சாலை அமைக்க ஊரக மற்றும் உள்ளாட்சி துறைக்கு நிலமாறுதல் செய்ய உள்ளதின் பொருட்டு 1.52.0 ஹெக்டேர் வனச்சரக நிலத்திற்கு ஈட்டு நிலமான சானமாவு கிராம புல எண்.467ஏ விஸ்தீரணம் 5.80.0 ஹெக்டேர் தீ.ஏ.த. கரடு புறம்போக்கு நிலத்தில் 3.04.00 ஹெக்டேர் நிலத்தினை வனத்துறைக்கு நிலவகை மாறுதல் செய்தல் - தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண். 503 வருவாய் (நி.மு.4(1)) துறை நாள்: 21.09.1999.
2. அரசாணை (பல்வகை) எண். 241 வருவாய் (நி.மு. 5(1) துறை நாள்: 16.05.2020.
3. இணை இயக்குநர், திட்ட இயக்குநர் மாவட்ட ஊராக வளர்ச்சி முகமை கிருஷ்ணகிரி அவர்களின் கடித எண்.ந.க.எண்.1608/2021/ஆர், நாள்: 24.07.2021.
4. சார் ஆட்சியர் ஒசூர், ந.க.எண்.2607/2021/அ1, நாள்:03.08.2021.
5. கிருஷ்ணகிரி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் தணிக்கைக் குறிப்பு நாள்:07.08.2021.
6. ஒசூர் வனக்கோட்டம், வன உயிரினக் காப்பாளர் அவர்களின் ந.க.7879/2021/வ1, நாள்:18.08.2021.
7. துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, அவர்களின் ந.க.791/2021/கனிமம்-2 நாள்: 19.08/2021.

--------

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டம், அயர்னப்பள்ளி கிராம, புல எண் 938, 939 விஸ்தீரணம் 0.18.91 ஹெக்டேர் அரசு போடுகால் புறம்போக்கு நிலம் புல எண்.940 விஸ்தீரணம் 0.04.45 ஹெக்டேர் போடுகால் புறம்போக்கு நிலம் புல எண்.954, 955, 956, 959 முதல் 965 மற்றும் 970 முதல் 972 மற்றும் 977, 978 ஆகிய புலங்களின் மொத்த விஸ்தீரணம் 32.49.0 ஹெக்டேர் அரசு தீ.ஏ.த வனச்சரகம் நிலத்தில் 1.52.00 ஹெக்டேர் ஆக இரு புறம்போக்கு நிலங்களையும் சேர்த்து மொத்த விஸ்தீரணம் 1.75.36 ஹெக்டேர் நிலம் அணுகு பாதை வசதிக்காக சாலை அமைக்க ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறைக்கு வழங்கும் பொருட்டு 1.52.0 ஹெக்டேர் வனச்சரக நிலத்திற்கு ஈட்டு நிலமான சானமாவு கிராம புல எண்.467ஏ விஸ்தீரணம் 5.80.0 ஹெக்டேர் தீ.ஏ.த. கரடு புறம்போக்கு நிலத்தில் 3.04.00 ஹெக்டேர் இருமடங்கு நிலத்தினை வனத்துறைக்கு நிலவகை மாறுதல் செய்ய கோரியதுபார்வை 3 -இல் காணும் கடிதத்தின் மூலமாக கேட்புத் துறையினர்

கோரப்பட்டதன் பேரில் பார்வை 4-இல் ஒசூர் சார் ஆட்சியரின் கடிதத்தின் மூலமாக நிலமாறுதல் மற்றும் நிலவகைமாறுதலுக்கான முன்மொழிவு வரப்பெற்றுள்ளது.

உட்பிரிவு:

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டம், அயர்னப்பள்ளி கிராம புல எண்.954, 955, 956, 959 முதல் 965 மற்றும் 970 முதல் 972 மற்றும் 977, 978 ஆகிய புலங்களின் மொத்த விஸ்தீரணம் 32.49.0 ஹெக்டேர் அரசு தீ.ஏ.த வனச்சரகம் நிலத்தில் 1.52.00 ஹெக்டேர் நிலத்தினை அணுகு பாதை வசதிக்காக கிராம சாலை அமைக்க ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறைக்கு நில வகை மாறுதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள இப்புலமானது கீழ்கண்டவாறு உட்பிரிவு செய்து சூளகிரி வட்ட துணை ஆய்வாளரால் முன்கூராய்வு செய்யப்பட்டுள்ளது.

நிலமாறுதல் உட்பிரிவு

| உட்பிரிவுக்கு முன்னர் | | | உட்பிரிவுக்கு பின்னர் | | |
|---|---|---|---|---|---|
| புல எண் | பரப்பு (ஹெக் டேரில்) | பாகுபாடு | புல எண் | பரப்பு ஹெக்டேரில் | பாகுபாடு |
| 954 முதல் 956, 959 முதல் 965, 970 முதல் 972, 977 முதல் 978 | 32.49.00 | அரசு தீ.ஏ.த வனச்சரகம் | 954 முதல் 956, 959 முதல் 965, 970 முதல் 972, 977 முதல் 978/1 | 28.71.30 | "அரசு தீ.ஏ.த வனச்சரகம்" |
| | | | 954 முதல் 956, 959 முதல் 965, 970 முதல் 972, 977 முதல் 978/2 | 01.52.00 | ஊரக வளாச்சி மற்றும் உள்ளாட்சி துறை |
| | | | 954 முதல் 956, 959 முதல் 965, 970 முதல் 972, 977 முதல் 978/3 | 2.25.70 | "அரசு தீ.ஏ.த வனச்சரகம்" |
| மொத்தம் | 32.49.00 | | மொத்தம் | 32.49.00 | |

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டம், அயர்னப்பள்ளி கிராம, புல எண் 938, 939 விஸ்தீர்ணம் 0.18.91 ஹெக்டேர் மற்றும் புல எண்.940 விஸ்தீர்ணம் 0.04.45 ஹெக்டேர் போடுகால் புறம்போக்கு நிலத்தினையும், புல எண். 954, 955, 956, 959 , 960, 961, 962, 963, 964, 965, 970, 971, 972, மற்றும் 977, 978 ஆகிய புலங்களின் மொத்த விஸ்தீரணம் 32.49.0 ஹெக்டேர் அரசு தீ.ஏ.த வனச்சரகம் நிலத்தில் 1.52.00 ஹெக்டேர் நிலத்தினையும், போடுகால் மற்றும் தீ.ஏ.த வனச்சரகம் ஆகிய இரு புறம்போக்கு நிலங்களையும் சேர்த்து மொத்தம் விஸ்தீரணம் 1.75.36 ஹெக்டேர் நிலம் அணுகு பாதை வசதிக்காக ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறைக்கு நிலவகை மாறுதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சாலை அமைக்க வழங்கப்பட்ட வனச்சரக நிலத்திற்கு ஈட்டு நிலமான சானமாவு கிராம புல எண். 467A விஸ். 5.80.0 ஹெக்டேர் அரசு தீ.ஏ.த. கரடுபுறம்போக்கு நிலத்தில் இருமடங்கு 3.04.00 ஹெக்டேர் நிலத்தினை மட்டும்

நிலவகை மாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது.

நிலவகை மாறுதல் உட்பிரிவு

| உட்பிரிவுக்கு முன்னர் | | | உட்பிரிவுக்கு பின்னர் | | |
|---|---|---|---|---|---|
| புல எண் | பரப்பு (ஹெக் டேரில்) | பாகுபாடு | புல எண் | பரப்பு ஹெக்டேரில் | பாகுபாடு |
| 467A | 5.80.00 | அரசு தீ.ஏ.த. கரடு | 467/A1 | 0.60.00 | கரடு |
| | | | 467/A2 | 3.04.00 | வனச்சரகம் |
| | | | 467/A3 | 0.97.01 | கரடு |
| மொத்தம் | 5.80.0 | | மொத்தம் | 5.80.0 | |

நிலவகை மாறுதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள நிலத்திற்கு சானமாவு கிராமத்தில் 05.07.2021 அன்று "அ1" விளம்பரம் செய்யப்பட்டு நாளது வரை எவ்வித ஆட்சேபனையும் வரப்பெறவில்லை. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட ஊராட்சியில் தீர்மானம் பெறப்பட்டுள்ளது. மேற்படி நிலவகை மாறுதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள புலத்தில் 2C/STT-ல் பதிவு செய்யப்பட்ட மரங்கள் ஏதும் இல்லை. இப்புலத்தின் வழியாக உயர் மற்றும் தாழ்வழுத்த மின்கம்பிகள் ஏதும் செல்லவில்லை. இப்புலம் தடையாணை புத்தகத்தில் பதிவு செய்யப்பட்ட நிலம் அல்ல. இப்புலம் ஆதிதிராவிடர் நிபந்தனைக்குட்பட்ட நிலம்அல்ல. இப்புலத்தில் 2சி/எஸ்.டி.டி. மரங்கள் மற்றும் சந்தரன மரங்கள் ஏதுமில்லை. பண்டைய காலத்து புராதன சின்னங்கள், மயானம், மசூதி மற்றும் தேவலாலயம் போன்ற வழிபாட்டுத்தலங்கள் ஏதுமில்லை.

நிலவகை மாறுதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள சானமாவு கிராம புல எண். 467A விஸ். 5.80.0 ஹெக்டேர் அரசு தீ.ஏ.த. கரடுபுறம்போக்கு நிலத்தில் எவ்வித ஆக்கிரமிப்புகளும் இல்லை.

ஈட்டு நிலமாக நிலவகை மாறுதல் செய்ய உத்தேசிக்கப்பட்ட 3.04.00 ஹெக்டேர் நிலத்தின் மதிப்பு ரூ.13,60,400/-ஆகிறது. (ரூபாய் பதிமூன்று இலட்சத்து அறுபதாயிரத்து நானூறு மட்டும்) ஆகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டம், அயர்னப்பள்ளி கிராம, புல எண் 938, 939 விஸ்தீர்ணம் 0.18.91 ஹெக்டேர், புல எண்.940 விஸ்தீர்ணம் 0.04.45 ஹெக்டேர் ஆகிய போடுகால் புறம்போக்கு நிலத்தினையும் புல எண். 954, 955, 956, 959 முதல் 965, புல எண். 970 முதல் 972, புல எண். 977 மற்றும் 978 ஆகிய புலங்களின் மொத்த விஸ்தீரணம் 32.49.0 ஹெக்டேர் அரசு தீ.ஏ.த வனச்சரகம் நிலத்தில் 1.52.00 ஹெக்டேர் நிலத்தினையும், போடுகால் மற்றும் தீ.ஏ.த. வனச்சரகம் புறம்போக்கு நிலங்களையும் சேர்த்து மொத்த விஸ்தீரணம் 1.75.36 ஹெக்டேர் நிலங்களை அணுகு பாதை வசதிக்காக சாலை அமைக்க ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறைக்கு நில மாறுதல் செய்திடவும், 1.52.0 ஹெக்டேர் வனச்சரக நிலத்திற்கு ஈட்டு நிலமாக சானமாவு கிராம புல

எண்.467ஏ விஸ்தீரணம் 5.80.0 ஹெக்டேர் தீ.ஏ.த. கரடு புறம்போக்கு நிலத்தில் 3.04.00 ஹெக்டேர் நிலத்தினை வனத்துறைக்கு நிலவகை மாறுதல் செய்யவுள்ள நிலத்தினை சூளகிரி வட்டாட்சியர் 22.07.2021 அன்றும், ஒசூர் சார் ஆட்சியர் 29.07.2021 அன்றும், கிருஷ்ணகிரி மாவட்ட வருவாய் அலுவலர் 07.08.2021 அன்றும் புலத்தணிக்கை செய்து கேட்புத் துறை கோரியுள்ள நிலத்தினை நிலவகை மாறுதல் செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளனர்.

பார்வை 1-இல் காணும் அரசாணையில் "சுகாதாரம் மற்றும் கல்வித்துறைக்கு நிலம் தேவைப்படும்போது நீர் நிலைப் புறம்போக்கு போன்ற தடையாணைக்குட்பட்ட நிலங்கள் நீங்கலாக ஏனைய இதர நிலங்களைக் கேட்புத் துறைகளுக்கு நிலமதிப்பு வரம்பின்றி (No Ceiling of Land Value) அரசுத்துறையின் தேவைகளுக்கும் தேவையான குறைந்த பட்ச நிலப்பரப்பினை மாவட்ட ஆட்சியாளர் அளவில் பொதுப்பணித்துறை மற்றும் சம்மந்தப்பட்ட துறையைக் கலந்தாலோசித்து நில மதிப்பு வரம்பின்றி வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பார்வை 6-ல் ஒசூர் வனஉயிரினக் காப்பாளர் அவர்களின் கடிதத்தில் சூளகிரி வட்டம், அயர்னப்பள்ளி கிராம, புல எண்.954, 955, 956, 959, 960, 961, 962, 963, 964, 965 மற்றும் 970 971, 972 மற்றும் 977, 978 ஆகிய புலங்களின் மொத்த விஸ்தீரணம் 32.49.0 ஹெக்டேர் அரசு தீ.ஏ.த வனச்சரகம் நிலத்தில் 1.52.00 ஹெக்டேர் நிலத்தில் அணுகு பாதை வசதிக்காக சாலை அமைக்க, அதற்கு ஈட்டு நிலமாக வழங்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள சனமாவு கிராம புல எண்.467ஏ/2-ல் 3.04.00 ஹெக்டேர் நிலமானது சானமாவு காப்புக்காட்டிற்கு அருகில் அமைந்துள்ளதால், வன பாதுகாப்பு பணிக்கு ஏற்றதாகவும், தோட்ட உற்பத்தி மற்றும் இதர வனத்துறை பணிகளுக்கு ஏற்றதாக அமையும் வகையில் உள்ளதாக கருத்திசைவு தெரிவித்துள்ளார்.

எனவே சூளகிரி வட்டாட்சியர், ஒசூர் சார் ஆட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோரின் பரிந்துரையினை ஏற்றும், பார்வை-1 மற்றும் பார்வை-2-ல் காணும் அரசாணைகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையிலும், கிருஷ்ணகிரி புவியியல் மற்றும் சுரங்கத்துறை துணை இயக்குநரின் கருத்திசைவின் பேரிலும், பார்வை 2-ல் காணும் அரசாணை (பல்வகை) எண்.241, வருவாய் மற்றும் பேரிடர்மேலாண்மைத்துறை, நிலமுடிவு எல்டி 5(1) பிரிவு, நாள்:16.05.2020-ல் சுட்டிகாட்டப்பட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டும் நிலவகை மாற்றம் செய்யப்படவுள்ளது.

எனவே, வன நிலத்திற்கு ஈடாக இருமடங்கு நிலத்தினை வழங்கிட இசைவளித்து பாதை அமைக்க சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தின் இணைய

முகப்பில் (PARIVESH) பதிவேற்றம் செய்து அனுமதியினை எதிர்நோக்கியுள்ளதை கருத்தில் கொண்டு, மாவட்ட வன அலுவலரின் கருத்திசைவின் பேரிலும், கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டம், அயர்னப்பள்ளி 954, 955, 956, 959 , 960, 961, 962, 963, 964, 965, 970, 971, 972, மற்றும் 977, 978 விஸ்தீரணம் 1.52.0 ஹெக்டேர் அரசு தீ.ஏ.த. வனச்சரகம் நிலத்திற்கு வனத்துறையின் அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் ஈட்டு நிலமாக தேர்வு செய்யப்பட்டுள்ள சானமாவு கிராம புல எண்.467ஏ விஸ்தீரணம் 5.80.0 ஹெக்டேர் தீ.ஏ.த. கரடு புறம்போக்கு நிலத்தில் இருமடங்கு 3.04.00 ஹெக்டேர் நிலத்தினை நிலவகை மாறுதல் செய்து வனத்துறையிடம் ஒப்படைக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

27/08

மாவட்ட ஆட்சியர்,
கிருஷ்ணகிரி.

2/2

27.8.2021

நகல் : வட்டார வளர்ச்சி அலுவலர், சூளகிரி.